[திரு. எஸ்.பி. வேலுமணி] [2014 ஜூலை 21

இன்றைக்கு அனைத்துப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள் இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டம் குறித்துப் பேசினார்கள். இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பணிகள் வேகமாக முடுக்கிவிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நிலத்தடி நீர் குறைந்துவரும் சூழ்நிலையில், மாற்றுக் குடிநீர் ஆதாரங்கள் ஏற்படுத்தப்பட்டு, குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாதவண்ணம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கே ஒரு பிரச்சினை வந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டு, துறை உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன, திடீரென்று இப்படி எழுந்து நின்று பேசுகிறீர்களே? (குறுக்கீடுகள்) இல்லை, நிகழ்ச்சி நிரலின்படி அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். இப்படி திடீரென்று நீங்கள் எழுந்துநின்று பேச முடியாது. (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்புத் தீர்மானமெல்லாம், என்னுடைய ஆய்விலே உள்ளது;*

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிகழ்ச்சி நிரலின்படி அடுத்த அலுவலுக்கே போய்விட்டேன். (குறுக்கீடுகள்) அவையெல்லாம் என்னுடைய ஆய்விலே உள்ளன; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை என்னுடைய ஆய்விலே உள்ளன; உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிகழ்ச்சி நிரலில் உள்ள அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். நீங்கள் அதிலே பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பி.வி. கதிரவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் நிகழ்ச்சி நிரலின்படி அடுத்த அலுவலை எடுத்துவிட்டேன். நீங்கள்* zero hour *போன்று, பிரச்சினைகளை எழுப்ப முடியாது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேரம் இப்போது 11–43. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் இப்போது பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். (குறுக்கீடுகள்) அதற்கும்மேலே அதிலே ஒன்றும் கேட்க முடியாது. (குறுக்கீடு) அதற்கும்மேலே அதிலே ஒன்றும் நீங்கள் கேள்வி கேட்க முடியாது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதிலேயெல்லாம் நீங்கள் கேள்வி கேட்க முடியாது; உட்காருங்கள்.*

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 163 முதல் 172 வரையிலான பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*